17/12/2025

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** Board Room

**Date:** $17^{th}$ December 2025

**Agenda:** Approval of Regulations and Syllabus for Part I Tamil, Basic Tamil, Advance Tamil for all UG Degree Courses, PG Degree Courses, Certificate Courses and Diploma Courses to take effect from 2026 - 2027.

The following members were present in the meeting:

1. **Dr. A. EKAMBARAM,** M.A (Tamil, English, Linguistics), M.Phil, Ph.D, B.Ed., PG.Dip in Ling. Professor and Head, Department of Tamil Literature, University of Madras, Chennai - 5 - External Subject Expert Member nominated by the Vice-Chancellor for PG Board

2. **Dr. VAANI ARIVAALAN,** M.A.(Tamil), M.A. (Sociology), Ph.D. (Tamil), PD, Assistant Professor in the Department of Tamil Language, University of Madras. Chennai - 5 - External Subject Expert Member (UG BOARD) nominated by the Vice-Chancellor for UG Board

3. **Dr. B. RAVIKUMAR,** M.A., M.Phil., Ph.D., Professor, Subramania Bharathi School of Tamil Language & Literature, Pondicherry University, R.V.Nagar, Kalapet, Puducherry – 605014. - External Subject Expert

4. **Dr. K. SIVAKUMAR,** M.A., M.Phil., Ph.D. Associate Professor, Department of Tamil, ThiruKolanjiyappar Government Arts College, Vridhachalam, Cuddalore District - 606 001.- External Subject Expert

5. **Dr. J. RADHAKRISHNAN,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Chairman.

6. **Dr. G. JAYASHREE,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

7. **Dr. S. NEELAMEGAN,** M.A., M.Phil., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

8. **Dr. N. APPADURI,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

9. **Dr. M. ANBAZHAGAN,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

10. **Dr. P. ANNADURAI,** Founder - Patron, Research Centre for Asiatic Culture, 14A, Vilakkadi Kovil Street, Kanchipuram - 631501 - Representative from Industry.

11. **Mr. K. SARAVANAN,** No. 3 Main Road, Dhamal Vilagae, Kanchipuram - 631 551. - U.G. Graduate Alumnus

12. **Dr. K.R. VENKATESAN**, Principal, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Special Invitee.

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

- **Nil**

*முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாதிரி பாடத்திட்டத்தின்படியும் இப்பாடத்திட்டக் குழுவில் பகுதி 1 க்கான மொழிப்பாடம், இளங்கலை மற்றும் முதுகலை பாடத்திட்டங்கள் குறித்தும் அடிப்படைத்தமிழ், சிறப்புத்தமிழ், சான்றிதழ்ப் படிப்புகள், பட்டயப் படிப்பு பாடத்திட்டங்கள் ஆகியன குறித்தும் கலந்தாலோசிக்கப்பெற்று பின்வருமாறு புதுப்பிக்கப்பெற்று ஒப்புதல் பெறப்பட்டது.*

1. *பகுதி 1 இல் (Part I Tamil) இளங்கலைத் தமிழ்ப் படிப்புக்கும் பிற அனைத்து இளநிலை படிப்புகளுக்கும் என நான்கு பருவத்தில் படிக்கும் வகையில் இரு வேறுபட்ட மொழிப்பாடத் திட்டங்கள் உயர் கல்வி மன்றத்தால்*

பரிந்துரைக்கப்பெற்றுள்ளது. அதன்படியே மொழிப்பாடங்கள் வகுக்கப்பெற்றுள்ளன.

2. தமிழியல் கல்வி ஆதார வளங்கள், தமிழ் மொழி அமைப்பியல், பொது மொழியியல், தமிழர் கலையியல் என்ற தாள்கள் முறையே இளங்கலைத் தமிழ் *(B.A. TAMIL)* பயிலும் மாணவர்களுக்கான அடிப்படைகளை வழங்கும் வகையில் பகுதி *1* தமிழ் *(Part I Tamil)* மொழிப்பாடத்தாள்களாக அமைகின்றன.

3. அனைத்து இளநிலை படிப்புகளுக்குமான மொழிப்பாடத்திட்டத்தில் அறிமுக நிலையிலான **தமிழக வரலாறும் பண்பாடும், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழரின் அறிவியல் சிந்தனைகள், தமிழும் கணினியும்** ஆகிய அடிப்படைகளுடன் வரலாற்று முறையே **தமிழ் இலக்கியப் பகுதிகள்** மற்றும் போட்டித்தேர்வுகளுக்கு உதவும் **மொழிப்பயிற்சிகள்** ஆகியன சீராக நான்கு பருவத்திற்கும் பகிர்ந்தளிக்கப்பெற்றுள்ளன.

4. **அடிப்படைத்தமிழ்** *(Basic Tamil)* மற்றும் **சிறப்புத் தமிழ்ப்** *(Advance Tamil)* பாடங்கள் தமிழின் பன்முகத்தன்மையை விளக்கும் வகையில் புதிய இலக்கிய பகுதிகளுடன் புதுப்பிக்கப்பெற்றுள்ளன.

5. இளங்கலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் முதன்மைத்தாள்களில் *(Core Courses)* முதல் பருவத்தில் ஒரே தாள்களாக இருந்த **இக்கால இலக்கியம்** மற்றும் **தமிழக வரலாறும் பண்பாடும்** தாள்கள் போட்டித்தேர்வுகள் நோக்கியும் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் விரிவு கருதியும் முதல் இரு பருவத்தில் தொடர்ச்சியாக கற்கும் வகையில் தலா இரண்டு தாள்களாகப் பகுக்கப்பெற்றுள்ளன. இதற்கு மாற்றாக **சிற்றிலக்கியம், பக்தி இலக்கியம், அற இலக்கியம், காப்பியம்** ஆகிய தாள்கள் முதுகலையில் இருந்து வேறுபடுத்தும் வகையிலும் ஓர்மை அடிப்படையிலும் **அறஇலக்கியமும் காப்பியமும்** என்றும் **பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும்** என்றும் இரு தாள்களாக முறையே நான்கு மற்றும் ஐந்தாம் பருவங்களில் வைக்கப்பெற்றுள்ளன.

6. இளங்கலைத் தமிழ் முதல் பருவத்தில் அடிப்படை பாடமாக *(Foundation Course)* வைக்கப்பட்டிருந்த சிறார் இலக்கிய பகுதிகள், இக்கால இலக்கியத்தாளில் சேர்க்கப்பெற்று அதற்கு மாற்றாக பிற இளநிலைப்படிப்பு மொழிப்பாடங்களில் இடம்பெறும் மொழிப்பயிற்சிகள் அனைத்தும் உள்ளடக்கிய நிலையில் **பயன்முறைத்தமிழ்** என்ற பாடம் அடிப்படை பாடமாக அமைக்கப்பெற்றுள்ளது.

7. இளங்கலையில் பிற முதன்மைத்தாள்களான *(Core Courses)* **தமிழ் இலக்கிய வரலாறு, நாட்டுப்புறவியல், சங்க இலக்கியம், திறனாய்வும்**

**படைப்பிலக்கியமும்** ஆகியனவற்றிலும் முதுகலை முதன்மைத்தாள்களான **இக்கால இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், ஆராய்ச்சி நெறிமுறைகள், சங்க இலக்கியம்** ஆகியனவற்றிலும் அவற்றினை அவ்வவ் இலக்கிய வரலாற்றுடன் அறியும் வகையில் புதுப்பிக்கப்பெற்றுள்ளன.

8. விருப்பப்பாடங்களாக *(Elective Courses)* இளங்கலையில் **செம்மொழித்தமிழ், தமிழர் மரபு மருத்துவம், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், தமிழ் மொழி வரலாறு, கோயிற்கலை, கணினித்தமிழ், சுவடியியல்** ஆகியவற்றுடன் **தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள், தமிழ் அழகியல், நாடகத்தமிழ், இந்தியத் தத்துவ ஞானம்** ஆகியன வைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறே முதுகலையில், **அயலகத் தமிழ் இலக்கியம், தமிழ் ஆவணங்கள், நோக்கு நூல்கள், நாட்டார் மரபுகள், சித்தரிலக்கியம்** ஆகியவற்றுடன் **உரையாசிரியர்கள், பெண் எழுத்து, தமிழ்க் கலை மரபும் பண்பாடும், சமஸ்கிருதமும் தமிழும், ஒப்பிலக்கியம், தமிழ் இலக்கண வரலாறு** ஆகிய தாள்கள் மாணவர் விருப்பத்தேர்வுக்குக்தக, கூடுதலாக வழங்கப்பெற்றுள்ளன. இந்த மிகை விருப்பப் பாடங்கள் ஒரு மாணவரால் அவரது பாடத்திட்டத்திற்குள் தேர்வுசெய்ய இயலாமல் போனாலும் மதிப்புக்கூட்டுப் பாடமாக சான்றிதழ்ப் படிப்பில் படிக்கத்தக்க வகையில் **சுற்றுலாவியல், கல்வெட்டியல், தொல்லியல், சுவடியியல், மரபிசை, சைவசித்தாந்தம்** ஆகியன வடிவமைக்கப்பெற்றுள்ளன.

9. இளங்கலையில் திறன் மேம்பாட்டுப் பாடங்களாக *(Skill Enhancement)*, **பேச்சுக்கலைத் திறன், மொழிபெயர்ப்பியல், சுற்றுலாவியல், அறிவியல் தமிழ், இதழியல், பணி வாய்ப்புத் தமிழ், அகராதியல், கல்வெட்டியல், இசைத்தமிழ், தொல்லியல், ஊடகவியல், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து** ஆகியவற்றுடன் **மெய்ப்புத்திருத்தம் மற்றும் பதிப்புக்கலை** புதிதாக வைக்கப்பெற்றுள்ளது. முதுகலையில் திறன் மேம்பாட்டுப் பாடங்களாக **மொழிபெயர்ப்புக்கலை, நூலகவியல், கள ஆய்வும் நேர்காணலும், பதிப்புக்கலை, பணித்தேர்வுத் தமிழ்**, ஆகியவற்றுடன் **தமிழ்க் கணினிப் பயன்பாட்டியல், சமூக ஊடகங்களும் உள்ளடக்க உருவாக்கமும், செய்தி சேகரிப்பும் செய்தி ஆக்கமும்** ஆகிய தாள்கள் புதிதாக அமைக்கப்பெற்றுள்ளன.

10. முதுகலை நிறைவு பருவத்தில் *(Professional Competency Skill Enhancement)* அவர்களுக்குப் பணி வாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில் போட்டித்தேர்வுகளுக்கான பாடமும் அவர்களது மேற்படிப்புக்கு உதவும் வகையில் **சமகாலத் தமிழியல் ஆய்வுச் செல்நெறிகள்** தாளும் விருப்பத்தேர்வுக்கு இடமளித்து அமைக்கப்பெற்றுள்ளன.

11. மேற்படி இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டங்கள் அனைத்தும் உயர் கல்வி மன்ற மாதிரி பாடத்திட்டத்திலிருந்து *(TANSCHE)* 30 சதவிகிதத்திற்கு மிகாமல் மாற்றி அமைக்கப்பெற்றுள்ளன.

**புதிய சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்புகள்**

முந்தைய பாடத்திட்டக்குழு பரிந்துரையின்படியே **சுற்றுலாவியல், கல்வெட்டியல், தொல்லியல், சுவடியியல், தமிழ்ப் பண்ணிசை** ஆகிய சான்றிதழ்ப் படிப்புகளுடன் *(Certificate Courses)* சைவசித்தாந்தம் பட்டயப்படிப்பிற்கு *(Diploma Course)* ஒரு பொது தாளுடன் 6 சாத்திர நூல் தாள்கள் அமைக்கப்பெற்று, பருவத்திற்கு ஒன்றென நடத்தப்பெற்று, பொதுத்தாளுடன் ஒரு சாத்திரத்தாளைப் படித்துத் தேர்ச்சிபெற்றவர்களுக்கு அச்சாத்திர நூல் தலைப்புடன் சேர்த்து சைவசித்தாந்த சான்றிதழும் ஒரு பொதுத்தாளுடன் மூன்று சாத்திர தாள்களைப் பயின்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு சைவசித்தாந்த பட்டயச் சான்றும் வழங்கப்பெற்று வருகிறது.

- சிறப்பாக நடைபெற்றுவரும் இப்பாடத்திட்டம் போலவே **ஊடகவியல் மற்றும் இதழியல்** *(Media and Journalism)* சார்ந்த சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகளுக்கான பாடத்திட்டங்களும் உருவாக்கி *2026-27* முதல் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பெறுகிறது. அதன்வழியாக வளர்ந்து வரும் ஊடகத்துறை வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவகையில் அச்சு ஊடகம் தொடங்கி செயற்கை நுண்ணறிவு வரையிலான உருவாகி வரும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் சான்றிதழ்ப் படிப்புகள் நடத்த பரிந்துரைக்கப்பெற்றுள்ளது.

- மேலும், ஒரு செய்முறை தாள் ஓர் எழுத்துத் தேர்வுக்குரிய தாள் என்ற வகையில் **தமிழ் மரபிசை *Certificate Course in Tamil Traditional Music*** மற்றும் **இந்து சமய அடிப்படைகளும் வாழ்வியல் நெறிகளும்** *(Certificate Course in Fundamentals of Hinduism and Life Ethics)* ஆகிய புதிய சான்றிதழ்ப் படிப்புகள் உருவாக்கப்பெற்று இப்பாடத்திட்டக்குழுவால் ஒப்புதல் வழங்கப்பெற்றுள்ளது.

**Signature of members:**

1. **Dr. A. EKAMBARAM** - 17/12/2025
2. **Dr. VAANI ARIVAALAN** - 17/12/2025.
3. **Dr. B. RAVIKUMAR** - B. Ravi ... 17/12/2025.
4. **Dr. K. SIVAKUMAR** -

5. Dr. J. RADHAKRISHNAN - 17/12/25

6. Dr. G. JAYASHREE - 17/12/25

7. Dr. S. NEELAMEGAN - 17/12/2025

8. Dr. N. APPADURI - 17/12/25

9. Dr. M. ANBAZHAGAN - 17.12.25.

10. Dr. P. ANNADURAI -

11. Mr. K. SARAVANAN - 17/12/25.

12. Dr. K.R. VENKATESAN -